# கோவையில் கலைஞரின் திருவுருவச் சிலை திறப்புவிழா

## நாள் : 09.08.2024

# கலைஞரும் கோவையும்

தமிழ்நாட்டில் தொழில்நகரமான நமது கோவை தலைவர் கலைஞருக்கு எப்பொழுதும் மனதிற்கு இணக்கமான ஊராகவே விளங்கிவருகிறது. திரைப்பட வசன கர்த்தாவாக தலைவர் கலைஞர் தன்னுடைய கலைப்பயணத்தை தொடங்கியதும் அவரது அரசியல் ஆசான்களான தந்தைப் பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் சந்தித்ததும் அவர்களோடு பணியாற்றியதும் நமது கொங்கு மண்ணில்தான். சென்னை, பெங்களூர், சேலம் என எந்தப் பெருநகரங்களில் இருந்தும் சாலை மார்க்கமாக கோவை நகரத்திற்கு வந்தாலும் கோவைநகரின் நுழைவு வாயிலில் முதன்மைச் சாலையோரம் விண்ணைமுட்டும் உயரத்தில் தமிழர்தம் நலவாழ்வுக்கு அடிப்படையாக விளங்கும் தி.மு. கழகத்தின் கொடியும், தலைவர் கலைஞரின் திரு வுருவ சிலையும், அறிவுசார் நூலகமும் கணியூர் கலைஞர் திடலில் அமைய உள்ளது. எதிர்வரும் ஆகஸ்ட் 09 ஆம் தேதி (09.08.2024) தமிழ்நாட்டரசின் முதல்வர் தளபதியார் அவர்கள் திறந்து வைக்க உள்ளார். இந்நிகழ்வையொட்டி தலைவர் கலைஞர் அவர்கள் நமது கொங்கு மண்டலத்திற்கு அவரது ஆட்சி காலத்தில் செய்த நலத்திட்டங்கள் சிலவற்றை வெளியிடுவதில் கோவை தெற்கு மாவட்ட திமுக பெருமைக் கொள்கிறது.

### கோவை – அவிநாசி சாலை மேம்பாலம் (1970)



தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வராகப் பதவியேற்ற அடுத்த ஆண்டே அதாவது 1970-ம் ஆண்டு கோவை நகரின் மிக முக்கிய அடையாளமாக விளங்கும் அவிநாசி சாலை உப்பிலிபாளையம் மேம்பாலத்தை உருவாக்கினார். இது தமிழ்நாட்டின் இரண்டாவது மேம்பாலமாகும். இன்றைய தலைமுறை தொழில்நுட்ப வளர்ச்சியில் மாபெரும் கட்டுமானங்களை பார்க்கிறார்கள். ஆனால் 1980 களின் தலைமுறைக்கு அந்த மேம்பாலம் மிகப்பெரிய ஆச்சரியம்தான். ரவுன்டானாவுடன் கூடிய முதல்தர பிரிப்பான்களை கொண்ட இந்தியாவின் முதல் பாலம். இதனிடையே ஒரு ரயில்வே பாதையும் செல்லும். 50 ஆண்டுகளைக் கடந்து இன்றும் கோவைமாநகரின் போக்குவரத்து நெரிசலை தடுக்கும் மாமருந்தாய் கலைஞர் பெயர் சொல்லியப்படி கம்பீரமாய் நிற்கிறது.



### கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம் ( 1971 )

இந்திய ஒன்றியம் அதிகமான விவசாய நிலங்களைக்கொண்ட நிலப்பரப்பு. விவசாயம் மிகவும் முக்கிய தொழிலாக விளங்கிவருகிறது. ஆகவே விவசாயத்தில் தொழில் நுட்பத்தை பயன்படுத்துவது என்பதே உணவு தன்னிறைவைத் தரும் 1868 சென்னையில் தொடங்கப்பட்ட விவசாய பள்ளி பின் நாட்களில் 1920ல் கோவைக்கு மாற்றப்படுகிறது. பின் அது விவசாயக் கல்லூரியாக செயல்பட்டு வந்தது. விவசாய ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கும் விதமாக தலைவர் கலைஞரது ஆட்சிகாலத்தில் 1971 ம் ஆண்டு இக்கல்லூரி விவசாயப் பல்கலைக் கழகமாக தரம் உயர்த்தப்பட்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு பேருதவியாக செயல்பட்டு வருகிறது.



### கோவை SIDCO வளாகம் ( 1972 )

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மிக முக்கிய காரணம் Inclusive Growth எனப்படுகிற ஒருங்கிணைந்த வளர்ச்சி தமிழ்நாட்டின் சிறுதொழில் வளர்ச்சிக்காக Small Industries Development Corporation என்ற பொதுத்துறை நிறுவனம் தலைவர் கலைஞர் அவர்களால் 16.03.1970 ல் தொடங்கப்பட்டு தமிழ்நாடு முழுவும் சிறு, குறு, நடுத்தர தொழிற்ச் சாலைகளை ஊக்குவிப் பதற்காக தொழில்வளாகங்களை ஏற்படுத்தியது. அதன் ஒருப் பகுதியாக நமது கோவையில் 1972 ஆண்டு இத் தொழில் வளாகம் ஏற்படுத்தப்பட்டது. கோவையின் இன்றைய தொழில் வளர்ச்சிக்கு இவ்வளாகம் முக்கிய பங்காற்றுகின்றது.

### கோவை புறவழிச்சாலை 1998 – 2000



வளர்ந்து வரும் கோவை மாநகரின் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு கோவை நீலாம்பூரிலிருந்து கேரள மாநிலம் செல்லும் வகையிலான புறவழிச்சாலை தலைவர் கலைஞர் ஆட்சிகாலத்தில் 1998ம் ஆண்டு தொடங்கப்பட்டு 2000ம் ஆண்டு பயன்பாட்டிற்கு வந்தது. 20 ஆண்டுகளைக் கடந்து இன்னும் கோவை நகரின் போக்குவரத்து நெரிசலை குறைத்து வருகிறது. கோவையின் அடையாளமாக விளங்கும் இச் சாலை.

### கோவை அண்ணா பல்கலைக்கழகம் 2006



உலகமயமாக்கலைத் தொடர்ந்து புலிப்பாய்ச்சலில் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தால் எண்ணிலடங்கா பொறியாளர் பணியிடங்கள் உருவானது. 2006 - 2011 தலைவர் கலைஞர் ஆட்சி காலத்தில் கிராமப்புற மாணவர்கள், முதல் தலைமுறைப் பட்டதாரிகள் என பலரை பொறியியல் கல்லூரிகளுக்கு அனுப்பி பொறியாளர்களாக மாற்றியது. தமிழ்நாடு முழுவதும் எண்ணற்ற பொறியியல் கல்லூரிகள் பெருகின. அவற்றைக் கட்டுப்படுத்த அண்ணா பல்கலைக்கழம் தமிழகத்தில் பல பகுதிகளில் தனது மையங்களை உருவாக்கியது. அதன் ஒருப்பகுதியாக நமது கோவையில் 2006 ம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகத்தின் மையம் உருவாக்கப்பட்டு அதற்காக பாரதியார் பல்கலைகழகத்தில் 130 ஏக்கர் தலைவர் கலைஞரால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### TIDEL தகவல் தொழில்நுட்ப பூங்கா 2010




தமிழ்ச்சமூகத்தில் நடுத்தரவர்க்க பிற்படுத்தப்பட்ட சமூகங்களை சார்ந்த குடும்பங்களின் பொருளாதார வளர்ச்சி இந்த தலைமுறையில் அசாத்தியமானது. உலகமயமாக்கலின் விளைவாக பெருகிவந்த தகவல் தொழில்நுட்ப புரட்சியில் தமிழ்சமூகம் மிக முக்கிய இடத்தைப் பிடிக்க அடிப்படை காரணமாக இருந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். இந்திய ஒன்றியத்திலேயே மாநிலத்திற்கென தனியானதொரு தகவல் தொழில்நுட்ப கொள்கையை வடிவமைத்த தொலைநோக்காளர் தலைவர் கலைஞர் அவர்கள். தனது ஆட்சிகாலத்தில் 02.08.2010 அன்று 67 ஏக்கர் நிலப்பரப்பில் 380 கோடி மதிப்பில் தகவல் தொழில்நுட்ப பூங்காவை தலைவர் கலைஞர் கோவை விளாங்குறச்சி பகுதியில் தொடங்கி வைத்தார். வெளியூர் மற்றும் வெளிநாடுகளுக்கு சென்று வேலைசெய்ய தயங்கிய முதல் தலைமுறை பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த மாணவிகளுக்கு இத்தொழில்நுட்ப பூங்கா வரப்பிரசாதமாக அமைந்தது.

**விவசாயத்திற்கு இலவச மின்சாரம் தந்ததும், 1975ம் ஆண்டு கொங்கு வேளாளர் சமுதாயத்தை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்ததும், 2009ம் ஆண்டு அருந்ததியர் மக்களுக்கு 3% உள் இடஒதுக்கீடு தந்ததும் தலைவர் கலைஞர் அவர்களே.**

# திருவுருவச் சிலையை திறந்து வைப்பவர்

## மாண்புமிகு

# தமிழ்நாடு முதலமைச்சர்



**நாள் : 09.08.2024 | முற்பகல் 11.00 மணி**

**இடம் : கலைஞர் திடல், கணியூர்**

**சட்ட மன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும் கழக நிர்வாகிகளும் பங்கேற்று சிறப்பிக்கவுள்ளனர்**



எம்
ஈரோட்டு
வல்லினத்தின்
மெல்லினமே...
நின்
அண்ணனுக்கு
எட்டாதது உமக்கு
எட்டியது
நிறைவாழ்வது...
நின் நிறைவாழ்வு
தந்தது தமிழர்தம்
நலவாழ்வு...
தமிழர் நாங்கள்
முகம் பார்த்தோம்
மு.க.கண்ணாடிவழியே...



அன்புடன் வரவேற்கும்

மாண்புமிகு **சு. முத்துச்சாமி**
வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சிதுறை,
மின்சாரம் மற்றும் மது விலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

திருமிகு **வி.செந்தில்பாலாஜி**
கரூர் சட்டமன்ற உறுப்பினர், கரூர் மாவட்ட செயளாளர்.

**தளபதி முருகேசன்**
மாவட்ட செயலாளர், கோவை தெற்கு மாவட்டம்.

அனைவரும் வருக!!

# கோவை தெற்கு மாவட்ட திமுக